**செய்தி வெளியீடு எண் : 249** **நாள்: 21.02.2022**

## செய்தி வெளியீடு

**சென்னை கடற்கரை சாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் கலந்து கொண்ட "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற மூன்று அலங்கார ஊர்திகளை கண்டுகளித்து கொண்டிருந்த பள்ளி மாணவ, மாணவியர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடி, மாணவச் செல்வங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (21.2.2022) தலைமைச் செயலகத்திலிருந்து செல்லும் வழியில், இந்திய விடுதலைப் போரில் தமிழக சுதந்திர போராட்ட வீரர்களின் பங்களிப்பை போற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டு, சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் கலந்து கொண்ட விடுதலைப் போரில் தமிழகம் என்ற மூன்று அலங்கார ஊர்திகளை சென்னை மெரினா கடற்கரை, காமராசர் சாலை, விவேகானந்தர் இல்லம் அருகே, பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை, திருவல்லிக்கேணி - ரேக்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளி, இ.வி.இ. மெட்ரிகுலேசன் பள்ளி, என்.கே.டி. தேசிய ஆண்கள் பள்ளி, மயிலாப்பூர் – பி.எஸ். பள்ளி ஆகிய பள்ளிகளின் மாணவ, மாணவியர்கள் கண்டுகளித்து கொண்டிருந்ததை கண்டு, தனது வாகனத்தை நிறுத்தச் சொல்லி அங்கிருந்த மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அலங்கார ஊர்திகள் முன்பு மாணவச் செல்வங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். மேலும், அலங்கார ஊர்திகளை காண வந்த பொதுமக்களிடமும் கலந்துரையாடினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலங்கார ஊர்திகள் குறித்து மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடியபோது, இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்கொண்ட தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாற்றை பற்றி அறிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது என்று மாணவ, மாணவியர் தெரிவித்தார்கள்.

மேலும், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் முகக்கவசங்கள் அணிந்து, அரசு வகுத்துள்ள கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பள்ளிக்கு சென்று, நன்றாக படிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**